எதென்ஸின் தீர்ப்பு

"கௌதமன்"

மின்னொளிப் பதிப்பகம்

7, கிரிகோரி தெரு ★ சென்னை—1

முதற் பதிப்பு—1951
பதிப்புரிமை

மறைந்த என் அருமைத் தந்தைக்கு
அன்புக் காணிக்கை

—கௌதமன்

விலை அணா 0 8 0

அச்சிட்டோர்: ஸ்ரீ சாயி பாபா அச்சகம், சென்னை-1.

முன்னுரை

"முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத் தெண்ணுயிரம் ரிஷிகளும், கின்னரரும், கிம்புருடரும், அறுபத்துமூன்று நாயன்மார்களும், பதினெட்டாழ்வா ராதிகளும், மத குருமார்களும், பண்டாரச் சன்னதி களும். தங்கி வாழ்ந்து அருள் பாலித்த பொன்னுடு தான் இந்தத் தென்னுடு" என்று உளம் பூரிப்போரே மிகுதியாக உலவும், இந்தக் கள்ளங்கபடமற்ற துர் பாக்கிய நாட்டில்—நாகரீகத்தின் கலைக்கூடமாக விளங்கி, மதிவாணர்கள் பலரைத் தோற்றுவித்து, மக் களின் அறிவுலகத்திற்கு அவர்களைத் தலைவர்களாக்கி, பெருமிதம் கொண்ட கிரேக்க மண்டலத்தைப் பற்றி யும், அதன் சுவைமிகு இலக்கியங்களைப் பற்றியும், அந்த இலக்கியங்களின் கருவூலமாகத் திகழ்ந்த அறி ஞர் மணிகளின் உண்மைத் தலைவன்—உத்தமப் பேரறி ஞன் சாக்ரடீஸைப் பற்றியும் எடுத்துக் கூற விழைவ தென்பது சற்று திடுக்கிடும் சம்பவம்தான் என்றாலும் ஆச்சர்யமான நிகழ்ச்சியல்ல! மனிதனின் வளரும் அறி வின் எதிரொலிதானது!!

சாக்டீஸ் கிரேக்க நாட்டிலே வாழ்ந்தவர். கி. மு. 470 முதல் கி. மு. 399 வரை ஏத்தென்ஸ் நகருக்குப் புகழ் தேடித் தந்த பலருள் முதலிடம் பெற்றவர் - நல்லதோர் பகுத்தறிவுவாதி - மூடபக்தியை வெறுத்த வர் - கடவுளர்களின் வீண் விவகாரங்களை அறிவுப் பிரசாரத்தின் மூலமாக கண்டித்தவர். அவரின் நேர் மைப் பிரசாரத்தைப் பிடிக்காதவர்கள் அவரின் அழி விற்கு அந்தரங்கமாக, வழிகோலினர்கள். அதன் விளை வெனத் தன் கிழ வயதில் ஏத்தேனிய நீதி மன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டு, "இளைஞர் சீலத்தைச் சிதைக்கும் மாபாவி இவன்" என்று குற்றஞ் சாட்டப்

பட்டார். பழமையிலே நெளிந்து பக்தியிலே தவழ்ந்து நின்ற எத்தேனிய நீதிமன்றம், சாக்ரடீஸுக்கு மரண தண்டனை விதித்தது அன்று, குற்றத்தை நிறுபிக்காமலேயே. 'தான் நிரபராதி தன் செயல் தவறுன்தல்ல' என்று வீரமாக வாதாடுகிறுர் சாக்ரடீஸ் நீதிமன்றத்தில் அந்த அருமைவாதத்தை—முறையாகத் தொகுக்கப்பட்ட அதன் சாரத்தைத் தாங்கி நிற்பதுதான் இச்சிறு நூல்.

பல நாட்களாக என் உள்ளத்திலே நினறு நிலவிவந்த இந்த என் எண்ணம் என் மதிப்பிற்குரிய நண்பர் ஈரோடு பாலகுரு அவர்களின் அரிய முயற்சியால் புத்த கரூபமாக இதை எழுத என்னைத் தூண்டியது—இதில் நால் ஓரளவு வெற்றியும் கண்டேன். ஓரங்க நாடகமாகவாகிலும் இதை எழுதி நடிக்க வேண்டுமென்ற என இரண்டாண்டு எண்ணமும் ஆசையும் உருவாக வாய்பும், வசதியுமில்லாட்டாலும், எங்கோ ஓரிரு நிகழ்சிகளைப் பற்றியாவது குறிப்பிட்டு அந்த லட்சிய வீரனை நம் சேர்ந்த தமிழகத்தாருக்குக் கவனப் படுத்தமுடிகிறதே என்று ஆறுதலடைகிறேன்.

இச்சிறு நூலை மனமுவந்து பிரசுரித்து, நம்மவருக்கு இதை உரிமையாக்க முன்வந்த 'மின்னொளி'ப பதிப்பகத்தாருக்கும், என் போன்ற இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற உயரிய எண்ணங் கொண்டு இப்பணிக்குப் பெரிதும் உதவிய என் நண்பர் கவிஞர் பாலகுரு அவர்களுக்கும் இதைக் கண்ணுற்றுத் தங்களின் பொனனுன மதிப்புரையை, வழங்கப் போகும் தமிழகத்தாருக்கும், என் இதய பூர்வமான நன்றியறிதலையும், வணக்கத்தையும், அன்புக் காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

மயிலை
25—11—51

அன்புள்ள,

'கௌதமன்'

ஏதென்ஸின் தீர்ப்பு!

★

எனதருமை ஏதென்ஸ் மக்களே! மாசிலா எண்ணமும், நிறை அறிவும் கொண்ட என் மங்கலத் தாய் நாட்டாரே! எழிலும் இன்பமும் சொரியும் இந்த கிரேக்க மண்டலத்தின் இன்ப வாழ்வை சுவைத்துத் திளைத்த இந்த நரைத்த கிழவனை எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு முதல் தடவையாக ஏதென்ஸின் நீதி மன்றத்திலே கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறீர்கள்! வேதனையுள்ளமும், நீதியற்ற போக்கும், பகுத்தறிவு வாதத்தை ஏற்க மறுக்கும் விதண்டா வாத எண்ணமும் கொண்ட வாதி மெலெட்டஸின் ஓர் சிறியக் குற்றச்சாட்டை முன் வைத்தே இந்த வயோதிகனை நீதி மன்றத்திற் கழைத்திருக்கிறீர்கள்! உள்ளபடியே இவ்வளவு ஆண்டுகளை மகத்தான அமைதியினூடே இளைஞர் மத்தியில் கழித்த எனக்கு இந்த மன்றத்திற்கு வருவதென்பது சற்று சங்கடமாகத்தா னிருக்கிறது. இவ்வளவு நாளாகியும் எனக்கு நீதிமன்றத்திலே பேசும் முறை தெரியாது; பழக்க மில்லாத காரணத்தால்! வாதி மெலட்டஸைப்போல அழகான வார்த்தைகளைத்

தேடி எதுகைமோனைகளோடு, அவற்றைக் குழைத்து, மெருகிட்டு எனக்கு பேசத் தெரியாதது மட்டுமல்ல, இந்த வயதிலே அப்படிப் பேசினால் உலகம்தான் நகைக்கும் என்று மனமார உணர்கிறவன் நான். ஆனால் வாதி மெலட்டஸ், என்னை "பேச்சில், கைதேர்ந்தவன். என் பேச்சைக் கண்டு நீங்களனைவரும் ஏமாந்து போகக்கூடாது. வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்று உங்களனைவரையும் எச்சரித்தான். உண்மையிலேயே இது எனக்குப் பெரும் வியப்பாகத் தானிருக்கிறது, மாணிக்கத்திற்கு உரைகல் தேவையில்லை—குழாங்கற்களுக்குத்தான் அது வேண்டும். அதேபோல் உண்மைக்கு சொல்லலங்காரம் வேண்டாம். பொய்யுரைக்கும், கட்டுக் கதைகளுக்கும்தான், அழகான பேச்சும் ஆளை மயங்க வைக்கும் எதுகை மோனைகளும் தேவை—மெலெட்டஸூம் அவன் நண்பர்களும் இந்தப் பணியை உங்களிடையே சற்று முன் திறம்படச் செய்து காட்டினார்கள்—அதுமட்டுமல்ல—இவ்வளவையும் செய்து காட்டிவிட்டு, என்னைப்பழித்தார்கள்—என்னைப்பற்றி தவறாக பொய்யுரை புகன்றார்கள்—உள்ளபடியே பொய்யை நீக்கி மெய்யை உள்ளது உள்ளவாறு கூறுவதுதான் நல்லதோர் சொற்பொழிவின் இலக்கணம். இந்த விதத்தில் பார்த்தால் ஒரு வேளை வாதிகளைவிட நான் பேசுவதில் சமர்த்தனாக இருக்கலாம் என்று ஒப்புக் கொள்கிறேன். வாதிகள் மனதறிந்த பொய்யை முன் கூட்டியே தயாரித்து வந்து வாய்கூசாமல் உங்களிடேயே கூறி தங்கள் பக்கத்திற்கு உங்களைத் திருப்ப பெரிதும் முயன்றிருக்கிறார்

கள். ஆனால் நானோ உண்மையான நிகழ்ச்சிகளை நேர்மையான முறையில் தொகுத்தறிவிக்கப் போகிறேன். எனவே அலங்காரப் பேச்சு எனக்குத் தேவையில்லை, இதுவரையில் கடைவீதிகளில்—தெருக்களில்—விளையாட்டரங்கில், உங்களிடையே எப்படி என் கருத்துக்களை தெரிவித்து வந்தேனோ அப்படியேதான் இன்றும் பேசுகிறேன்—"நீதி மன்ற மொழியிலே பேசவில்லை பார் இவன்" என்று என்மீது தயவு செய்து கோபிக்க வேண்டாம்.

நான் சொல்வனவற்றை இடையில் தடையில்லாமல் பொறுமையோடு கேட்டுத் தெளிந்த பிறகு உங்களின் பொன்னனத் தீர்ப்பை எனக்களியுங்கள் என்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

எனதருமை ஏதென்ஸ் மக்களே! இன்றைய தினம் என்மீது வாதிகளால் சாட்டப்பட்டிருக்கும், குற்றச்சாட்டு இன்றுதான் புதிதாக சாட்டப்பட்ட ஒன்றல்ல—பல் வேறு ஆண்டுகளாக பொருமைக்காரர்கள் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த எரிமலைதான். அவைகள். இன்று இங்கே வீற்றிருப்போர்களில் பெரும்பாலோரின் இளமைப் பருவமுதலே, இன்று சாட்டப்பட்ட இதே குற்றச்சாட்டும் பழியும் என்மீது சாட்டப்பட்டு வந்திருக்கிறது—சிறு வயதில் ஓர் அபிப்ராயம் மனதைக் கவர்ந்துவிட்டால் அதை மாற்றுவதென்பது அரிது அரிது; வெகு வெகு அரிது. இந்த முறையில்தான் நான் உங்கள் முன்னிலையில் குற்றவாளியாக நிற்கிறேன். சில பல ஆண்டுகளாகவே என் நடவடிக்கைகளி

லும்—என் சொற்பொழிவுகளிலும் அதிருப்தி கொண் டவர்கள் இருந்திருக்கிறார்கள்—"சாக்ரட்டீஸ் ஓர் நாஸ் திகன்—வான வெளிமுதல் பாதளம் வரை உலகில் காணும் பொருள்கள் அனைத்திற்கும் புதுப் புதுத் தத் துவார்த்தம் சொல்லும் குதர்க்க வாதி—கைதேர்ந்த பேச்சுக்காரன்—அகில உலகைக் காத்தருளும் ஆண்டவ கோடிகளையேத் தவறாக மக்களுக்கு அறிமுகப்படுத்து கிறவன்—பக்தியைக் கெடுப்பவன் — பூ ஜை யை வெறுப்பவன்—இயற்கைச் சக்திகளின் தராதரங்களை ஆராய்ந்து அவற்றை எதிர்ப்பவன் இளஞ்சிறார்களின் சீலத்தைக் கெடுப்பவன்" என்றெல்லாம் நான் மக்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டவன் எனவே இன்று இதோ இந்த மன்றத்தில் நிற்கும் மெலெட்ட ஸையும் (Meletus) அனேட்டஸையும் (Anytes) மற்றவரையும் நான் நோகவில்லை. அவர்களை என் எதி ரியாகவும் நான் எண்ணவில்லை. இத்தகைய தவறான எண்ணங்களை, என்னைச் சரியாகப் புரிந்துக் கொள்ளா மல் ஆதி முதலே தொடர்ந்து பிரசாரம் செய்து வந் தோரைத்தான் என் பரம விரோதிகளாக நான் எண் ணும் அவசியத்தில் இருக்கிறேன். என்றாலும் அவர்க ளையும் நான் வெறுக்கவில்லை. ஆனால் அவர்கள் கூறிய பழியான வாசகங்களுக்குத்தான் நான் பெரிதும் அஞ்ச வேண்டியிருக்கிறது. எது எப்படியானாலும் எனக் களிக்கபட்டிருக்கும் வெகு குறுகிய காலத்தில் உங்களி டையே என் கட்சியை பேசி, என் மீது சாட்டப்பட்டி ருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு வாதிகளை, நேருக்கு நேர் நின்று கேள்வி கேட்டு அவர்கள் வாய் சொற்களா

லேயே நான் நிரபராதி என்று நிரூபிப்பதென்பது வெகு கடினமான பணிதான் என்ருலும் இயன்ற அளவில் உங்களுக்கு நல்லதோர் சமாதானமும் திருப்திகரமான தோர் பதிலும் அளிக்க முயல்கிறேன்.''

இங்ஙனம் முழக்கிருர் கிரேக்க மூதறிஞர் சாக்ரடீஸ். இன்றைக்கு 2400 ஆண்டுகளுக்கு முன் ஏதென்ஸில் வாழ்ந்த மாவீரர் சாக்ரடீஸ். ஓர் அருமையான குணங்களைக் கொண்ட கர்மவீரர்—பகுத்தறிவுவாதி—கருத்திற்கும்—நாகரீகத்திற்கும் ஒவ்வாத எல்லாவற்றையுமே அவர் பொதுவாக விரும்பவில்லை. கடவுள் மதம் ஆராதனை விக்ரக வழிபாடு போன்றவைகள் காரணமற்ற பணியாகவே அவருக்குத் தோன்றியது. எனவே அதைக் கண்டித்து பிரசாரம் செய்தார் மக்களிடையே மாலைவேளைகளில் கடைவீதிகளிலும் - சந்தைப் பேட்டைகளிலும் இவரின் அறிவுப் பேச்சைத் தினமும் கேட்கலாம். இவரின் அறிவுப் படையின் ஈட்டிமுனையென இளைஞர் படை திரண்டெழுந்தது. எப்போது பார்த்தாலும் இளைஞர் கூட்டம் இவரைச் சூழ்ந்தவண்ணம்தான் இருந்தது. பக்தியும், கடவுள் பயமும் இதனல் பொதுவாகவே தேய்ந்து வரலாயிற்று எனவே பெரும்பாலான பெற்ருேர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளை இத்தகைய பகுத்தறிவு பிரசாரத்தைக் கேட்கவிட விரும்பாததுமட்டுமல்ல இத்தகைய பிரசாரத்தையே தடை செய்து சாக்ரடீஸைத் தொலைத்துவிட வேண்டுமென்றும் கருதினர்கள் சில சூது மதியினர்கள்—எனவே சூழ்ச்சி மெலெட்டஸ் உருவில் திரண்டெழுந்தது.

மெலெட்டஸ் (Melotus) ஓர் கவிஞன். லைகோன் (Lycon) ஒரு நாவலன். அனேட்டஸ் ஓர் தோல் வியாபாரி. அனேட்டஸின் (Anytus) மகன் சாக்ரடீஸ் (Socrates) பினுல் எப்போது பார்த்தாலும் திரிந்தவண்ண மிருந்தான். நாட்டின் தெய்வங்களை அனேட்டஸின் மகன் மதிப்பதில்லை. எனவே நல்லதோர் சந்தர்ப்பம் பார்த்து அனேட்டஸ் மெலெட்டஸ் என்ற கவிஞனை அழைத்து அவனை சாக்ரடீஸ் மீது மோதவிட்டு தான்பின்புறமிருந்து உதவி புரிந்து எப்படியும் சாக்ரடீஸை ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தான். அதுமட்டுமல்ல ஏற்கனவேசாக்ரடீஸிடம் வாதத்தில் தோற்ற மெலெட்டஸும் லைக்கோனும் (Lycon) இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடவில்லை. இதன் எதிரொலியென சாக்ரடீஸ்மீது மெலெட்டஸ்ஸால் வழக்கு தொடரப்பட்டது—கி. மு. 399-ல். வழக்கின் சாரம் வருமாறு:

பித்தஸ் கூற்றத்தில் வசிக்கும் மெலெட்டஸின் மகனுன மெலெட்டஸ் ஆகிய நான் அலோபக் கூற்றத்தில் வசிக்கும் ஸொப்ரானிஸ்கஸ் (Sepuroniscus) மகனுன ஸாக்ரடீஸ்மீது சாட்டும் குற்றம் வருமாறு:—

1. சாக்ரடீஸ் ஒரு நாஸ்திகன்—மத விரோதி—கடவுள் நிந்தகன்—கிரேக்க அரசாங்கமும், மக்களும் தொழும் கடவுளர்களை இவன் தொழுவதில்லை. அதற்கு மாருக புதிய தெய்வங்களை—கொள்கைகளை மக்கள் உள்ளத்தில்—மன்றத்தில் பரப்புகிருன்.

2. இதனல் இளைஞர்களின் சீலம் கெடுகிறது—பக்தி குறைகிறது. மதம் அதன் மதிப்பை இழந்து வருகிறது.

3. எனவே பிரதிவாதியான சாக்ரடீஸிற்கு மரண தண்டனை விதிக்கக் கோறுகிறேன்.

வழக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டது—நீதி மன்றத்தாரால். ஐந்நூற்றுவர் அந்நீதி மன்றத்தின் அறநெறி காப்போர்-இவர்கள் முன்னிலையில்தான் வழக்கு ஆரம்பமாகியது-முதலில் வாதிகள் சார்பில் குற்றச் சாட்டுகளை நிரூபிக்க மெலெட்டஸ் பேசினன்-பிறகு சாக்ரடீஸ் குற்றச்சாட்டுகள் தவறு-தான் நிரபராதி-என்பதை நிரூபிக்கப் பேசுகிருர்-அந்தப் பேச்சின் ஆரம்பம்தான் மேலே காணப்படுவது-இதோ மேலும் அந்த வார்த்தைகளைதொடர்ந்து பார்க்கலாம். இனி மேலெட்டஸ் சாட்டிய குற்றச்சாட்டுகளை ஒன்றன் பின் ஒன்ருகக் கவனிக்கலாம்.

'நான் ஒரு நாஸ்திகன்—கடவுளர்களைப் பழிப்பவன்—வான வெளியை, பூவுலகப் பொருள்களை, சோதிக்கும் இயற்கை அன்னையின் விரோதி என்றெல்லாம் மெலெட்டஸ் உங்கள் முன்னிலையில் கூறினன். உள்ளபடியே நாஸ்திகன் என்ருல் என்ன? நாஸ்திகன் என்ருல் யார் எத்தகைய பண்புடையோன் நாஸ்திகனுகக் கருதப்படுவான் என்ற கேள்விகளுச்கு பதில் என்ன என்ருவது உறுதிப்படுத்திக் கொண்டு மெலெட்டஸ் இந்தச் குற்றங்களைச் சாட்

டினரா என்ருல் இல்லை என்ற பதில்தான் கிட்டும்—மெலேட்டஸ் வாக்குப்படியே நாஸ்திகன் யார் என்ரு வது சற்று அலசித்தான் பார்ப்போமே, அகில உலகை யும் படைத்தளித்துக் காத்து வருவதாகக் கருதப்படும் ஆண்டவனை அல்லது சக்தியை இல்லையென்று முழுக்க முழுக்க சாதிப்பவன்தான் நாஸ்திகன். இந்த இலக் கணப்படிப் பார்த்தாலும் நான் எப்படி நாஸ்திகனு வேன், காணும் கடவுளர்களை இல்லையென்ரு உங்களி டையே நான் சொன்னேன்—பார்க்கும் இடந்தோறும் நீக்க மறத்தெரிகின்ற ஆண்டவனையா குற்றம் சொன் னேன். வினையின் நீங்கிய அறிவின் முனைவனையா பழித்தேன்—அங்கெங்கெனுதபடி எங்கும் பிரகாசமா னவனையா தூற்றினேன். பிறவாயாக்கைப் பெரியோ னையா வேண்டாமென்றேன்—இவைகளை—இயற்கைச் சக்திகளை உண்டாக்கி உலகை இயக்கி வருவதாகக் கரு தப்படும் ஒரு மகத்தான சக்தியையா நான் சந்தேகித் தேன்? இவைகளையெல்லாம் என்ருவது பழித்தேன். என்று யாராவது கூறமுடியுமா? இங்குள்ளோர் அனை வரும் வாதிகள் உள்ளிட்டு ஏறத்தாழ என் பேச்சைக் கேட்காதவர்கள் யாரும் இல்லை. இவர்களில் யாராவது சொல்லட்டும் நான் எத்தகைய கடவுளர்களைப் பழித் தேன் என்று? டெல்பியில் (Delphi) திகழ்ந்து இந்த கிரேக்க மண்டலத்தையே ஆட்சிப் புரிவதாகக் கருதப் படும் ஆண்டவனின் மீது எனக்கு அன்பும் அந்தரங்க மதிப்பும் இல்லையா? ஆனல் அந்த மதிப்பை மரியா தையை, பக்தியாக்கி. ஆராதனையின் மூலம் ஆண்டவ னைக் கல்லில் அறைந்து அழகுபார்க்கும் பண்பினன் அல் லன் நான் என்பது மட்டும் உறுதி. எவரும் விரும்பாத

சேதியை, ஏற்க முடியாத விதண்டா வாதத்தை-கேட்க சகிக்காத பொய்யுரைகளை ஆண்டவன் லீலை-அரி அவதாரத்தின் திருக்கதைகள் என்றெல்லாம் புனைந்துரைக்கும் வெட்டு, ஒட்டு வேலைக்காரனல்ல நான் என்பது மட்டும் நிச்சயம். இந்த நேர்மையான என் கொள்கைகளை புரிந்து கொள்ளாத பெரும்பாலோர் என்னை நாஸ்திகனாக்கி துராத்மாவாக்கி மரண தண்டனை விதிக்கவும் கோருகிறார்கள். இந்த வழக்கின் போக்கு விசித்திரமாக இருந்தாலும் வேதனை நிரம்பியதாகவே இருக்கிறது ஆண்டவனைக் குடும்பரீதியில் மக்களுக்குக்காட்டாதே-ஒழுக்க ஈனமான செய்கைகளை ஆண்டவன் புரிந்ததாக்கி அதை ஆண்டவன் திரு அவதார லீலைகளாக்காதே என்று சொன்னால் தவறென்ன? இதுவா நாஸ்திகம் ?-இதை நேர்மையாக வாத முறையில் மக்களுக்குச் சொல்லி திருத்துபவனா நாஸ்திகன்? உள்ளபடியே வானவெளியை சோதித்தால் தவறென்ன? நட்சத்திரங்களை-சந்திரனை-பூமியை-சூரியனைக்-கிரணங்களைச் சோதிப்பதில் தவறென்ன? இதைச் செய்தாலா இயற்கையை எதிர்ப்பவன் நான்-எனதருமை ஏதென்ஸ் (Athens) மகா ஜனங்களே! நீங்களே சொல்லுங்கள் "கடல் அலைகள்" இயற்கையான செல்வங்களில் ஒன்று! அந்த அலைகளை அடக்கி ஆழியிலேமிதக்க கலங்கள் பல கட்ட மனிதன் எண்ணிய போது-இயற்கையை எதிர்ப்பது ஓர் பயங்கரமான விஷயம் என்று அவன் மனதில் தோன்றியிருந்தால் இன்று பாரசீகமும் (Persia) மற்ற நாடுகளும் கண்டு அஞ்சும் அளவுக்கு நம்மிடையே கடற் படைபலமும், மரக்கலங்களும் இருந்திருக்க முடியுமா? எண்ணிப்பாருங்கள் உல

கைப் படைத்த அண்ணலாம் ஆண்டவன் அதில் பல வசதிகளை இயற்கையோடு உள்ளடக்கிவிட்டு நமக்கு அதை திருத்தி அமைக்கும் உரிமை அளிக்கும் வகை யில் ஒவ்வொருவனுக்கும் பகுத்தறிவையும் படைத் தார்-இந்த பகுத்தறிவை மனிதன் உபயோகப்படுத்து வது தவரு ? உலகப் பொருள்களை ஆராய்வதால் நாஸ் திகப்பட்டம் கிட்டுமானுல் முதன் முதல் கலம் கண்டு அலையை அடக்கியவனுக்கல்லவா அந்த நாஸ்திகப்பட் டம் சூட்டப்பட்டிருக்கவேண்டும்? முதன் முதல் இயற்கைச் செல்வமான பூமியைத் தோண்டிய விவசா யிக்கல்லவா இந்தப் பட்டம அளிக்கப்பட்டிருக்க வேண்டும்? அவைகளெல்லாம் நாஸ்திகச் செயலாகக் கருதப்படாதபோது நான் பூமியின் நடைமுறைகளை-வான வெளியின் தரா தரங்களைப்பற்றி எண்ணியதற் காகவா நான் துர் ஆத்மாவாக்கப்பட வேண்டும்-மகேஸ் வரனின் அருளை செயலை உள்ளது உள்ளவாரே காட் டுங்கள் மிகைப்படுத்தாதீர்கள்-இழிவுபடுத்தாதீர்கள்-மற்ற நாட்டினர் எள்ளி நகையாடும் வகையில் அமைக் காதீர்கள் என்ருல் இதுவா நாஸ்திகம்? இதற்காகவா நான் ஒழிக்கப்படவேண்டும்? உள்ளபடியே கடவுள் ஆணையைப் பின்பற்ற ஒரு சிலர் இன்னும் இந்த பொன் னுட்டில் இருக்கிருர்களென்ருல் அந்தப் பட்டியலில் என்னையுமல்லவா முதலில் நீங்கள் சேர்த்திருக்க வேண் டும்? அப்படிக்கில்லாமல் என்னையா கேலிக் குறியதோர் பொருளாக்குவது ? இதுவா பக்தியின் மகிமை யோசித் துக் கூறுங்கள் என் பொன்னுட்டினரே !

என்னைப்பற்றி இவ்வளவு வெறுப்பும் பகையும் ஒரு சிலர் கொண்டிருக்கிறார்களென்றால் அதற்குக் காரணம் நான் நாஸ்திகன் துராத்மா என்பதற்காக மட்டும் அல்ல!-ஆனால் உண்மையான காரணமும் உண்டு—அதை இந்த அவை அரங்கில் உங்கள் முன்னிலையில் எடுத்துரைக்க எனக்கு யாதொரு தடையுமில்லை. இங்கு என் மேல் வழக்குத் தொடுத்திருப்பவர் முதல் இன்னும் பல அதி மேதைகள் வரை என்னிடம் பல பொது இடங்களில் வாதம் செய்திருக்கிறவர்கள் அந்த நேரத்தில் நான் அவர்களை பல முறைகளில் மடக்கி மடக்கிக் கேள்வி கேட்டது. அவர்களுக்கு பிடிக்காதது மட்டுமல்ல-அவர்களின் அறியாமையை யாதொரு தங்கு தடையுமின்றி மக்கள் முன் வைக்க அதுவே எனக்குப் பெரியதொரு வாய்ப்பாக மிளிர்ந்தது—பண்டிதர் என்பார் ஒருபுறம் கவிஞர் என்பார் மற்றொரு புறம்-காவியக்கர்த்தாக்கள் என்பார் ஒரு புறம் நாவலர்கள் என்போர் பிரிதோர் புறம் என அறிஞர் உலகமே தினமும் என் மேல் படையெடுத்த வண்ணமிருந்தது-இந்த ஓர் நிகழ்ச்சி தான் என்னைக் கண்டு மற்றவர்கள் பொறாமைப் படுகின்ற அளவுக்கு என்னைப்பற்றிய புதியதோர் அபிப்பிராயத்தை பரப்பக்காரணமாக இருந்தது. நன்கு பாண்டித்யம் அடைந்த கவிஞரை நான் ஏதோ ஓர் பொதுவான சேதியைப்பற்றி வினவுவேன்; நண்பர் திகைப்பார் அருகிலுள்ள மக்கள் கூட்டம் கவிஞரின் அறியாமையைக் கண்டு நகைக்கும் -இந்த நிலை கவிஞருச்குக் கோபத்தைத்தான் உண்டாக்கும் "விஷயஞானமில்லையே தன்னிடம்" எனக் கவிஞர்

தன் அறியாமையை உணரமாட்டார். ஆனால் அதே நேரத்தில் "சாக்ரடீஸை எப்படியும் தொலைத்தாக வேண்டும்" என்ற திட நம்பிக்கையுடன் தான் அந்தக் கூட்டத்தைவிட்டு வெளியேறுவார்-இப்படியேதான் அறிஞர் கூட்டம் எனக்கெதிராகத் திரண்டெழுந்தது-இந்தப் பெரியதோர் எதிர்ப்பு முண்ணனி உருவானதை நான் உணராமலில்லை. ஆனால் அதைப்பற்றிக் கவலைகொள்ளவில்லை-அதைத் தவிர்க்க முடியாது என்ற காரணத்தால். எனவே கவிஞர் உலகிலிருந்து கனிவாய் மொழிபேசும் இளைஞர் உலகிற்கு நான தள்ளப்பட்ட தன் காரணமே-அறிஞர்கள் என்று நாடு நம்பி இருந்தோரின் அறியாமையை வெளிப்படுத்தியதனால் தான்-இந்த எதிரொலியின் செயல்தான் இன்று நீதி மன்றத்தில் நான் நிற்பது.

அதுமட்டுமல்ல! என் எழில் நாட்டினரே! எந்த அறிவு, அறிஞர்கள் என்போரிடம் இல்லையென்று நான் வெளிப்படையாக தெளிவுபடுத்தி வந்தேனோ அதே அறிவை விஷய ஞானத்தை நான் பெற்றிருப்பதாக மக்களில் பெரும்பாலோர் நினைத்தனர். இதுவும் எதிரிகள் எண்ணத்திற்கு பொருமையாகவே பட்டது. மேலும் இளைஞர்கள் நான் மற்றவருடன புரிந்த வாதத்தை அலசிப்பார்த்து அதைப் போல தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பழகிக் கொண்டதுடன் என்னைப் போலவே நாட்டின் உயிர் நாடிகள் என மதிப்பிடப்பட்டோரின் போலி அறிவை அவர்களும் வெளிப்படுத்த முயன்றார்கள் எனவேதான் பெரும்பகையும்-பேராபத்தும்—மீளாப்பழியும் என் மேல் சுமத்தப்பட்டு கடைசியில்

என் அந்திய காலத்தில் நீதியைத்தேடி நான் அலையுமளவுக்கு நிலைமையையும் வளர்த்துவிட்டு விட்டது,

எது எப்படியாஞலும் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றி உங்களிடையே எடுத்துக் கூறி உங்களை என்பால் திருப்ப போதிய காலமும் போதிய வசதியும் எனக்கில்லை. வாய்பும் அளிக்கப்படவில்லை, எனவே இன்றையளவில் மெலெட்டஸ் கொண்டுவந்த இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு இவ்வளவு குறுகிய கால அளவில் மெலேட்டஸின் வாய் முறையாகவே குற்றச் சாட்டுக்களை ஆராய்வோம்.

" அன்புள்ள மெலெட்டஸ்: என் மீதுள்ள குற்றச்சாட்டை இன்ஞெரு முறை சற்று விளங்கச் சொல்!"

" முதலிலேயே கூறியாய்விட்டது. மீண்டும்...... ......!"

" கூறமுடியாது போலும்?"

" ஆமாம் "

" ஓஹோ! சரி! நான் இளஞ்சிருர்களின் சீலத்தைக் கெடுக்கிறேன்; அதுதானே உன் குற்றச்சாட்டு?"

" ஆமாம்! ஆமாம்!"

" அப்படியா? சிருர்களின் விஷயத்தில் மிகவும் கவலைப்பட்டே இந்தக் குற்றச்சாட்டை கொண்டு வந்திருக்கிருய் அல்லவா நீ? இளைஞர்கள் சேதியை நன்கு

ஆராய்ந்த பிறகே தானே இந்த குற்றச்சாட்டை நீ இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிருய் ?''

'' ஆமாம். அதிலென்ன சந்தேகம் !''

'' சரி ! இளைஞர்கள் தூய்மையான கல்வியை நேர்மையான முறையில் பயில்வது நாட்டிற்கு மிகவும் அவசிய மல்லவா ?''

'' ஆமாம் !''

'' அப்படியானல் இந்த இளைஞர்களுக்குப் போதிக்கும் நல்லாசிரியர்கள் தான் யார் ? யார்? ''

'' (பதில் இல்லை) ''

'' ஏன் பதிலில்லை மெலெட்டஸ் ! பதில் சொல்ல முடியவில்லையா ? இதைப்பற்றி நீ யோசிக்கவில்லை போலும் ! யோசிக்காமல் ஒரு குற்றச்சாட்டை அனு வசியமாக ஒருவன் மீது சுமத்த முற்படுவது வெட்கக் கேடான விஷயமல்லவா ? கோழைத்தன முடையோர் புரிய விரும்பும் அநியாயமல்லவா இது ? தயவு செய்து சொல்லேன். யார் தான் இளைஞர்களை ஒழுங்குள்ள பிரஜைகளாக்க வல்லவர்கள். ''

'' இந் நாட்டு சட்டங்கள் ''

'' என்ன இது மேலெட்டஸ்...அதையா நான் கேட்டேன் நம் சிறுர்களை சட்டம் தெரிந்தோர் எவர் நல்ல வழியில் திருப்ப வல்லார். அதைச் சொல்லேன்.''

"நீதிபதிகள் தான்"

"வெகு நேர்த்தியாக இருக்கிறதே நீ சொல்வது! அறநெறி காப்போரா இளைஞர்களின் போதகாசிரியர்கள்? அவர்களாலா இயலும் அந்தக் காரியத்தைச் சாதிக்க"

"ஏன் முடியாமல்"

"அப்படியானல் அத்தகைய பண்புடைய நீதிபதிகளில் சில பலரைக் குறிப்பிடுவாயா?"

"சில பலர் என்ன எல்லோருந்தான் செய்வர்?"

"பலே விசித்திரமாக இருக்கிறதே நீ பேசுவது - சரி நியாய மன்றத்தைத் தவிர்த்து இதோ நியாயமன்ற ஆலோசகர்கள்?"

"அவர்களும் தான்"

"சரி! இவர்கள் எல்லோரும் போதிக்கத் தகுந்தவர்கள் அப்படித்தானே!"

"அதிலென்ன சந்தேகம்"

"இவர்களில் யாரும் இளைஞரைக் கெடுப்பதில்லையே?"

"இல்லை! நிச்சயமாக இல்லை - அவர்களனைவரும் குணசீலர்கள் - நேர்மையான பாதையில் இளைஞர் படையைக் கொண்டு செல்லும் நல்லாசிரியர்கள்."

"ஆகவே - இந்த பரந்த நாட்டின் ஓர் தனி அங்கத்தினன் முதல், நீதி மன்றத்தார் வரை, யாவரும்

இளைஞர் பால் அன்பும் தயையும் கொண்டவர்கள். அவர்களின் சீலத்தின் மேல் பற்றுக்கொண்டவர்கள் - நான் ஒருவன் மட்டும் தான் இந்த ஏதேன்ஸினிய மண்டலத்தின் குழைந்தைகளைக் கெடுப்பவன்—அப் படித்தானே?''

"ஆமாம் - ஆமாம்! அதைத்தான் நான் வற் புறுத்திச் சொல்ல விரும்புவது.''

"மகா ஜனங்களே! நான் எப்படிக் கெட்டுப்போ னவன் - எப்படி துராத்மாவாக்கப் பட்டவன் பார்த் தீர்களா? இந்த நாட்டினரில் என்னைத் தவிர்த்து மற் றவர் அனைவரும் ஒன்று சேர்ந்து இளைஞர் விஷயத் தில் அக்கரை கொண்டிருக்கும்போது இந்தக் கிழவன் ஒருவனால் மட்டும் - அவன் வாய்ச் சொல்லினால் மட் டும், இளைஞர்கள் கெட்டொழிகிறார்கள்! என்ன விசித் திரம் பாருங்கள். மெலெட்டஸ்...எவ்வளவு பெரிய பொய்யை மெருகிட்டுக் கூறுகிறான் பாருங்கள்? உள்ள படியே இளைஞர் பிரச்சனையை, அவர்களின் ஒழுக்கப் பிரச்னையைத் தீர அலசி, ஆராய்ந்துதானா இப்படி கூறுகிறான் இவன் என்று சற்று சிந்தித்துப்பாருங்கள். மன்றத்தாரே! இளைஞரைப்பற்றி ஒரு சிறிதாவது கவலைப்பட டிருப்பானா இவன்? எந்த ஒரு இளைஞனுக் காவது ஒரு நாளாவது இவன் போதித் திருப்பானா? அல்லது எந்த ஒரு இளைஞனுடனாவது என்றாவது ஒரு நாள் - ஒரு நாழிகைப் பழகி அவர்களின் பண்பை - தேவையை உணர்ந்திருப்பானா இந்த மெலெட்டஸ்?... ......? இவற்றில் எதையும் செய்யவில்லை யென்பதை

இவன் பேச்சில் காணும் - நெளிவு - குழைவிலிருந்தே தெரியவில்லையா? ஆனாலும் பாதகமில்லை. மெலெட்டஸ். இளைஞர்களை நான் மனதறிந்தே கெடுக்கிறேனா அல்லது அறியாமல் செய்கிறேனா?

"வேண்டு மென்றேதான் செய்கிறீர்"

"அப்படியா? தீய ஒழுக்க முடையோரால் பிறர்க்கும் தீங்குதானே நேரும்."

"நிச்சயமாக"

"எவனாவது தனக்குத்தானே கேடு சூழும் வழி வகைளை தன் மனதறிந்தே தேடிக்கொள்ளுவானா?

"ஒருக்காலும் மாட்டான்"

"அப்படியானால் நீ சொல்வதி லொன்றும் அர்த்த மில்லையே! நானே இளைஞர்களை இழிவும் - பழிவும் கொண்ட காரியங்களைச் செய்யென்று தூண்டி விட்டு விட்டு நம்மின் இப்பரந்த நாட்டிற்கே - அதன் மக்களுக்கே - அதில் வாழ்கின்ற எனக்கே தீங்கு செய்யும் படி செய்யச் சொல்கிறேன் என்றல்லவா எனக்குச் சொல்லுகிறாய் நீ! அதாவது என்னை நானே இளைஞர்களின் தீச்செயலுக்கு ஆட்படுத்திக் கொள்கிறேன். என்பதை நீ மனமார உணர்ந்துதானே சொல்லுகிறாய்? என் நலன்—என வசதி எனக்குத் தெரியாது—தெரியவில்லை, ஆனால் உனக்கு மட்டும் அது தெரிகிறது. எவ்வளவு விசித்திரம் பாருங்கள் மகா ஜனங்களே! இதை யாராகிலும் நம்பமுடியுமா? நம்ப இடமிருக்கிறதா?

சிறுவர்களை மெலெட்டஸ்......கூறுகிறபடி மனமார நான் எப்படிக் கெடுக்க முடியும்? ஏன் கெடுக்க வேண்டும்? ஒரு வேளை என்னையுமறியாமல் இந்தக் குற்றத்தைச் செய்தேன் என்று இப்பொழு மேலெட்டஸ்-விஷயத்தை மாற்றிக் கூறத்துணிந்தாலும் அதுவும் எப்படிக் குற்றமாகும்? அறியாமல் செய்த குற்றத்திற்கு எப்படிக் கடுமையான தண்டனை தரமுடியும்? உள்ளபடியே 'இளைஞர்கள் மேல் இவனுக்கு அக்கரை இருந்திருந்து—அவர்களை நான் மனதறிந்து கெடுக்கிறேன் என்று இவன் உணர்ந்திருந்தால் மெலெட்டஸ்...என்ன செய்திருக்கவேண்டும்?, என்னைத் தனித்தல்லவா அழைத்திருக்க வேண்டும் புத்தி புகட்ட. அங்ஙனம் அழைத்தானு என்றால் இல்லை என்றுதான் பதில் வரும் அவனிடமிருந்து. அங்ஙனம் அவன் உண்மையிலேயே எச்சரித்திருந்தால் நானும் என் செயல் தவறென்று உணர்ந்து இருந்தால் அதை அந்த அளவோடே ஆராய்ந்தறிந்து நிறுத்திக் கொண்டிருப்பேன் அல்லவா? அங்ஙனம் செய்தானு மெலெட்டஸ் இல்லையே ஆனல் உங்கள் முன்னிலையில் அல்லவா நிறுத்தி விட்டான் தண்டனை தர எனவே மன்றத்தார்களே—இதிலிருந்து புரியவில்லையா? இவன் ஒரு போலி என்று எதையோ முன்வைத்துப் பழிவாங்க நினைச்சிருனென்று.

மகா ஜனங்களே! மேலெட்டஸ் பேசும்போது கூறினன் புதிய தெய்வங்களை நான் உண்டாக்குகிறேன் என்று நான் புதிய தெய்வயகளை சிருஷ்டிதது அவற்றை வணங்கு என்று கூறியதாக வென்றே வாதத்திற்கு வைத்துக் கொள்வோம். அப்படியானல் நான் ஏதோ ஒரு தெய்வத்தின் மீது நம்பிக்கைக் கொண்டவ

ஞகத்தானே இருக்க முடியும் புதிய கடவுள்களை சிருஷ்டிக்க முற்படுபவன் ஏதாவது ஓர் தெய்வத்தை நம்பினதாக—ஒப்புக்கொ ண்டவனுத்தானே ஆகும்? அப்படியானுல் நான் எப்படி நாஸ்திகனுவேன்? எண்ணிப பாருங்கள் சற்று மெலெட்டஸ் எப்படி முன்னுக்குப் பின் முரணுகப் பேசுகிருனென்று,

எனவே மெலெட்டஸ் வார்த்தைகள் பொய்யும் புணேந்துரையும் கொண்டவை—வேண்டுமென்றே—பழி வாங்கும் உணர்ச்சியுடன் முற் கூட்டியே பலருடைய கூட்டுழைப்பால் தயாரித்த சதித்திட்டம்—என்பதை அதிகமான உதாரணங்களால் நான் விளக்கத் தேவையில்லை என்றே கருதுகிறேன்—ஆகவே—நேர்மையான வாதங்களை முன் வைத்து என்னைக் குற்றவாளி யாக்க வாதிகளால் முடியாது—மேலும் நானும் அத்தகைய குற்றங்களை என் மனதறிய இந்த வயதிலும் செய்தது கிடையாது—வேண்டுமென்ருல் மற்றவர்களுக்கு நான் ஒரு பகைவனுக—நாஸ்திகைக—தவருக அறிமுகப்படுத்தப் பட்ட காரணத்தால் தண்டனைக்குள்ளாக்கப்படலாமே தவிற நீதியை முன் வைத்து வாதிகளால் தண்டிக்க இயலவும் இயலாது—தேவையுமல்ல அது! மக்கட் சமுதாயத்தின் தூய்மையான எண்ண அலைகளுடன்—நஞ்சைக் கலக்கி—மாசற்றவரை — களங்கபடற்றவரை— உண்மைக்காக மக்களின் நல்வாழ்விற்காக உழைப்பவரை—துயர் உறச்செய்வதென்பது இன்று நேற்று ஏற்பட்ட பழகக மல்ல! உலகு தோன்றிய கால முதல் இயங்கி வரும் தொத்து வியாதி. இது உங்களனைவருக்கும் தெரியும் இற்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த (கி, மு,

500) டையோகரஸ் (Dia Gorus) கதை—பகுத்தறி விற்காக மாண்புள்ள நாகரீகத்திற்காக—கிரேக்க மண் டலத்தோரின் உயர்விற்காக தன் வாழ்வை அர்பணித்த மாவீரன் டையோகரஸ் (Dia Gorus)-மிலாஸ் நகரில் வாழ்ந்தவன் தன் கொள்கையால் மக்கட் சமுதாயம் உயர அவர்கள் உள்ளத்தில் கப்பிக் கொண்டிருக்கும் மாசு அகல அஞ்சாது பாடு பட்டுழைத்தவன்-அநாக ரீகமான கடவுட் கொள்கைகளை தவறென்று மக்களுக் குணர்த்திய கண்யவான்-அவன் கதி என்ன தெரியுமா கடைசியில்! தன் தாயகத்தைவிட்டே ஓட வேண்டி வந்தது. தான் கொண்ட கொள்கைக்காக பிறந்த பொன்னாடு அவன் பிணத்தை அணைத்துக் கொள்ள உரிமை பெறவில்லை ;தாயகத்திலிருந்து விரட்டப்பட்ட அந்த மாவீரன் காரீநீத் (Corinith) நகரம் சென்றே மாய்ந்தான்-எனவே அதே நாட்டில் பிறந்த எனக்கு- அவன் கதையுடன் , உலக சீர்திருத்த வீரர்கள் பலரின் சரிதங்களைப் பார்த்தும், கேட்டும் இருக்கிற எனக்கு- நான் கொண்ட என் கொள்கைக்காக அவர்களின் கதியை எல்லாம் விட மேலானதாக ஏற்பட்டாலும் அதையும் நான வர வேற்கத் தயார் தான்-என் முயற் சியில் தோல்வியுற்றாலும் நான் கவலைக் கொள்ளப் போவதில்லை-மக்கட் சமுதாயம்-அறநெறியைக் காக் கின்ற அளவுக்கு-நாகரீகத்தை கைக்கொள்ளும் அள வுக்கு பண்பட்டதாயில்லை என்றே இருந்து விடுகி றேன்ன்-ஆனால் ஒன்றுமட்டு நிச்சயம் இன்றில்லாவிட் டாலும் ஒருநாள் மக்கட் சமுதாயம் என்னைப் பற்றி- என் வாழ்வைப் பற்றி-என் சொல்லைப் பற்றி-என் செயலைப் பற்றி எண்ணித்தான் தீரும்-தன்மான ஏத்

தேனியன் ஒவ்வொருவனின் உள்ளத்திலும் என் கொள்கைகள் நிலைபெறத்தான் போகிறது! என்னைக் கொடுமைப்படுத்திய சேதி-தண்டித்த சேதியை அவர்கள் அறியும் போது வெட்கப்படத்தான் போகிருர்கள் -வாதி சொன்னபடி என்னைக் கொல்வதால் எனக்கு ஒன்றும் நீங்கள் கேடு செய்தவர்களாகமாட்டீர் ஆழ் கடலில் திசையறியா கலம் போல் நாடு கொந்தலிப்பில் சிக்கி அலையுமோ என்றுதான் அஞ்சவேண்டியிருக்கிறது—தானுக வந்த ஓர் பொருளை ஏனே உதைத்துத் தள்ளுகிருர்கள் என்றுதான் அஞ்சவேண்டியிருக்கிறது. மற்றபடி என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள திணையளவும் எனகது எண்ணமில்லை. மன்றத்தைக் கண்டு பயப்படுபவன் கோழை—அதற்காக கொண்ட கொள்கையை மாற்றிக் கொள்பவன் துரோகி—ஓர் தவருன சேதியால் ஓர் பொருள் கெடும் என்று அறிந்து கொள்ளமுடியாதவன் அப்பாவி-அறிந்தும் சொல்ல அஞ்சுபவன் கோழை—அறிந்தும் தனக்குள் வைத்துக்கொண்டு தன் நலனுக்காக பயன் படுக்தித் கொண்டு மற்றவனுக்கும் சொல்ல மறுப்பவன் துரோகி—சுய நலக்காரன் இந்தப்படி நாட்டின் நடைமுறைகளை சீர் கேடுகளை உணர்ந்தவன் நான்—மற்றவர்களுக்கு இதை மன மாற எடுத்துரைக்காவிட்டால் நான் பெரிய துரோகியாவேன் எனவே என்னை நீங்கள் அனெட்டஸ் கூறியபடி இந்தத் தடவை ஏதோ ஓர் காரணத்தை முன் வைத்து என்னை மன்னித்துவிட்டு விட்டு மீண்டும் அப்படிச் சேய்யக் கூடாது என்ற வாக்குறுதி கேட்டாலும் தரமாட்டேன், நானும் வாளாக இருக்கமாட்டேன், உங்கள் அன்பிற்கும் கருணைக்கும் என் நன்றியைத்

தெரிவித்துவிட்டு மீண்டும் பழயபடி எனக்கு நல்லது என்று பட்டத்தை என் உயிருள்ளவரை—எவரெதிர்த் தாலும்-மரணத்திற்கும் அஞ்சாமல் தைரியமாக உல கிற்கு எடுத்துரைத்துப்பேன் எனவே நான் என் சுய நலத்திற்காக எதையும் செய்யவில்லை எல்லாம் என் எழில் நாட்டின் உயர்விற்காக-என் பெரிய குடும் பத்தின் சுகத்தையும்-என் உயிரையும் பாரமல்-என் கடமையை ஆற்றுவது என்று தீர்மானித்து விட்டேன் -உங்கள் கருணையால் கிட்டப் போகும் என் உயிரை விட, என் மனம் அறிவிக்கும் உண்மைகள் தான் எனக்கு மேன்மையானது இதைப் பலசந்தர்பங்களிலே நான் வெளிப்படையாகவே காட்டியிருக்கிறேன், போர் முனை முதல் அரசாங்க மன்றம் வரை இன்னும் பல இடங்களில் என்னுடன் பழகியவாகள் நன்கு அறிவார் கள் இதை!

ஓர் சமயம் நமது படைகள் தேலியத்தில் (Delium) பின் வாங்க நேரிட்டபோது அனைவரும் பின்னேறினர். ஆனால் நான் மட்டும் நின்ற இடத்தை விட்டு அசையவேயில்லை. என்னைப்போலவே ஏத் தெனிய தீரர்கள் அனைவரும் அன்று நின்றிருந்தால் ஏத்தென்ஸ் அந்த முறை தோற்றே இருக்காது. ஆல்ஸிபியாடிஸைக் கேட்டால் இதுபற்றி விரிவாக எடுத்துரைப்பார். என்னைப் பொருத்தமட்டில் எனக்கு உயிர் மேல் ஆசை இருந்திருந்தால் அவர்களைப் போலவே தப்பி ஓடி வந்திருப்பேன். மற்றொரு சம யம் என் உயிரையும் பொருட் படுத்தாது தளபதி ஆல் ஸிபியாடிஸ் (Alci Biades) உயிரைக் காத்திருக்கி றேன். பிரிதோர் சமயம் நான் நாடாளும் பொறுப்பின

ருள் தலைவனுகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது நம் தாயகத்தின் தளபதிகள் பத்து பேர்கள் ஆர்கினூஸா யுத்தம் சம்பந்தமாக விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டனர். அவர்களின் மேல் மொத்தமாக குற்றம் சாட்டப்பட்டதே தவிர. தனித்தனியாக குற்றம் வரையறுக்கப்படவில்லை. இதைத் தவறு என்று நான் உணர்ந்ததும் கடைசிவரை அதை எதிர்த்து - உங்கள் தீர்ப்பை நிராகரித்து என் தலைமையின் வாக்கை உபயோகித்து அவர்களுக்கு நல்ல தீர்ப்பை அளித்தேன், இதனுல் உங்கள் விரோதமும் எனக்கேற்பட்டது. உயிர் மேல் ஆசை எனக்கு இருந்திருந்தால் அப்படி செய்திருப்பேனு நான்? மற்றுமோர் சமயம் முப்பதின்மர் ஆட்சியில் சாலமிஸ் நாட்டைச் சேர்ந்த லியான் (Leon of Salamis) என்கிற பிரபுவை அநியாயமாக கொலைசெய்ய அழைத்துவர எனக்குப் பணிந்தார்கள். இதை அறிந்த நான் கடைசிவரை இந்தப் பாதகச் செயலுக்கு மறுத்தேன். இதனுல் அந்த முப்பதின்மர் மிகவும் என்னைக் கடிந்தனர். இவற்றை யெல்லாம் நான் எடுத்துரைப்பதால் நான் இவற்றிற்கு ஏதோ கைமாறு 'கேட்பதாக நினைக்க வேண்டாம். உண்மைக்காக நல்ல சூழ்நிலைக்காக, நான் என் உயிரையும் திரணமாக மதித்து வந்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு எடுத்துக் காட்டத்தான் இதைச் சொல்கிறேன். எனவே என்னை மன்னித்து விடுங்கள் என்று கேட்டுக் கொள்வது என் எண்ணமல்ல! முறையுமாகாது. ஏத்தேனிய மண்டலத்திலுதித்தவன் அங்ஙனம் கேட்பது இழுக்கு என்று மனமார உணருகிறவன் நான். ஆகையால் உங்களின் தீர்ப்பை—அதை அளிக்கும்வாய்ப்பை

நன்ருகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நேர்மையை தயைக்கும், தாட்சண்யத்திற்கும் விற்று விடாதீர்கள். எனக்காக—என் நல் வாழ்வுக்காக—என் குடும்பத்தின் சுகத்திற்காக என் விடுதலையை நான் எங்கே கோருவே னென்று எண்ணுதீர்கள் இங்ஙனம் நான் கேட்டால் கிரேக்க தருமத்தையே பழித்தவனுவேன்—என் சுய நலத்தால் நீதி மன்றத்தின் தூய்மையையே கெடுத்தவ னுவேன், மெலெட்டஸ் சொல்கிறபடி நாஸ்திகனு மாவேன். எனவே வாதிகளுக்கும் பக்தியைவிட—நேர் மைக் கொள்கைகளைவிட என்னிடமிருப்பது தூய்மை யானதும் சக்தி வாய்ந்ததும் ஆகும். என்பது உண்மை யானல் உங்களுக்கு நீதி என்று உளமாரப் பட்டதை எனக்கு தீர்ப்பென அளியுங்கள் என்று உங்களை மிக வும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.''

சாக்ரடீஸின் தூய்மை யுள்ளத்தைத் தெள்ளிதின் விளக்கிக் காட்டும் இந்த மகத்தானதோர் சொற் பொழிவு, இன்றும் உலக இலக்கியங்களிலே ஒன்ருக—சிறந்ததாக கருதப்பட்டு வருகிறது. கிரேக்க நாடு அதன் உயர்வு—அதன் தாழ்வு—சாக்ரடீஸின் பிறப்பு-அவர் வளர்ச்சி—அவருக்கு அளிக்கப்பட்ட மரண தண் டனை—ஆகியவைகளை ஒட்டியே வளர்ந்தும், தேய்ந்தும் வந்திருக்கிறதென்பதைக் கிரேக்கர் உணர வெகுகாலம் பிடிக்கவில்லை. சாக்ரடீஸின்—கடைசி உயிரணு அதை அறிவித்துத்தான் பிரிந்தது. காலவேகம்—உணர்ச்சி யின் தூய்மை—வெகு எளிதில் சாக்ரடீஸிற்கு—மகத் தானதோர் செல்வாக்கை ஏற்படுத்திக் கொடுத்தது என்பதை இந்த நியாமன்ற விசாரணையிலே அறிந்து கொள்ளலாம். சாக்ரடீஸின்...மேலே காட்டியுள்ள

இந்த அறியதோர் சொற்பெருக்கிற்குப் பின்னர்—நட ந்த வாக்கெடுப்பே இதை நிரூபிக்கும் 'உரைகல்லாகும். சாக்ரடீஸ் குற்றவாளியா? என்ற கேள்வி "சாக்ரடீஸ் மேலெட்டஸ் "வாதத்திற்கு பிறகு ஐநூற்றுவர் அடங் கிய மன்றத்தில் எழுப்பப்பட்டது. வாக்கெடுப்பில் 220 வாக்குகள் சாக்ரடீஸிற்கு சாதகமாக - அதாவது அவர் குற்ற வாளியல்ல வென்றும் - 280 வாக்குகள் குற்ற வாளி யென்றும் அவரவர்கள் தீர்ப்பை வழங்கினர். சாக்ரடீஸிற்கு உள்ளபடியே விசாரணையில் தோல்வி யென்ருலும் - அது எத்தகைய தோல்வி என்று பார்க் கிற நேரத்தில்தான் நாம் வியப்புற வேண்டியிருக்கி றது. காட்டுமிராண்டித் தனமும் மூட நம்பிக்கையும் மலிந்துக் கிடந்த நேரத்திலே, பழமைக்கும் புதுமைக்கு மிடையே ஏற்பட்டது இந்த மோதுதல். இதிலே பழைமையைத் தாங்கிப் பிடிக்க உதவிய ஓட்டுக்கள் வெரும் 60 தான் - சாக்ரடீஸ் காலம் முதல் காந்தியார் காலம் வரை உலகில் மதத்திற்காக - கொள்கைக்காக- கடவுளுக்காக ஏற்பட்ட போராட்டங்களும் சாய்ந்த உயிர்களும் எண்ணற்றவை என்பதை எண்ணிப் பாாத்து உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை மக்களிடையே கிளம்பிய மத-இன-வெறி யின்னும் அடங்கிய பாடில்லையே என்றெண்ணி பெருமூச் செறி கின்ற இந்த நேரத்திலே இன்றைக்கு 2400 ஆண்டு களுக்கு முன்னே ஒரு நரைத்த கிழவர் பழமைக் கெதி ராக புரட்சி செய்து 500-க்கு 220 வோட்டுப் பெற்ருர் என்ற சேதியை தெரிந்து கொள்ளுகின்றபோது உள்ள படியே சாக்ரடீஸ் கொள்கையிலே எவ்வளவு தூய்மை யும், நேர்மையும் இருந்திருக்க வேண்டும்? அவரது

பேச்சில் எவ்வளவு தெளிவும், அழகு உவமைகம் மிளிர்ந்திருக்கவேண்டும்? சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே! இதைநினைத்தாலே நெஞ்சத்தோடு உடலும் சிலிர்க்கிறது. அது மட்டுமல்ல இதே அந்த மாவீரனின் வழக்கை தொடர்ந்து கவனிப் போம்.

மேலட்டஸ்: "மான்பு மிக்க ஏத்தென்ஸ் நகரத் தார்களே! இவ்வளவு நேரம் சாக்ரடீஸின் பிரசங் கத்தை கேட்டீர்கள். உள்ளபடியே அவர் பேச்சு முழு வதும் நாஸ்திகத்தை மெருகிட்டு ஆஸ்திகப் பாணி யோடு குழைத்தூட்டும் மதி மயக்கப் பிரசாரமா கவே இருந்தது என்பதை நான் உணர்ந்திருப்ப தைப் போலவே நீங்களும் உணர்ந்திருப்பதற்காக பெரும் மகிழ்ச்சி யடைகிறேன் - அது மட்டு மல்ல! சாக்ரடீஸின் நாஸ்திகம் நமக்குத் தேவையில்லை. அதை அவர் நம் இளைஞருக்கு நாட்டினருக்கு, எந்த காரணத்தைக் கொண்டும் இனி பிரசாரம் செய்ய வேண்டுவதில்லை - இதுவரை செய்து வந்ததே மாபெரும் குற்றம் - மன்னிக்க முடியாத பெரும் பிழை என்பதே தீர்மானிக்கும் வகையில் 'சாக்ரடீஸ் குற்றவாளிதான்' என்று உங்களில் பெருவாரியான வர் தீர்ப்பளித்திருக்கிறீர்கள். என்வே வாதியென்ற முறையிலும் பிரதிவாதி குற்றவாளி என்று உங்கள் முன்னிலையில் தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப்பட்டு விட்டார். என்ற அடிபடையின் மீதும் நான் பிரே ரேபிக்கும் இந்த மரணதண்டனையை இந்த நீதி மன் றத்தின் சார்பாக - அறநெறி காப்பாளர்களாகிய உங் களின் வாக்காலேயே, அங்கீகரித்து அதை நிறைவேற்

றியும் தருமாறும் பணிவுடன் கேட்டுக் கொள்கி றேன்.''

ஆம்! அறிவைப் பொழிந்து அறியாமையைத் துரத்தியவருக்குத்தான் மரண தண்டனை விதிக்க பிரே ரேபித்தான் மேலெட்டஸ். நீதி மன்றமே இதைக் கேட்டு நிலை குலைந்தது. தங்களையுமறியாது ஓர் அதிர்ச்சியை அவர்கள் அடைந்தனர், ''மரண தண் டனை'' மதி மன்னன் சாக்ரடீஸிக்கா எனத் துடிதுடித் தனர் அருகிலிருந்த இளைஞர் மணிகள் - இந்நிலையில் மீண்டும் பேசுகிறார் சாக்ரடீஸ்:

''என் வளமிக்க பொன்னாட்டினரே! என்னை ஓர் குற்றவாளியென பெருவாரியாக தீர்பளித்துவிட்டீர் கள். உள்ளபடியே நான் இதைக் கண்டு கலங்கவு மில்லை. அஞ்சவுமில்லை. காரணம்? நான் நன்கறிவேன் உங்கள் தீர்ப்பு இப்படித்தான் கண்டிப்பாக இருக்கு மென்று! ஆனால் ஒன்று! இவ்வளவு குறைந்த வாக்கு களே என்னைக் குற்றவாளி யாக்கி யிருப்பதைக் காண எனக்கு வியப்பாகவே இருக்கிறது. அதிர்ஷ்ட வச மாக இன்னும் 60 வாக்குகள் மட்டும் என் பக்கம் வந்திருந்தால் வழக்கின் முறை - தீர்ப்பு ஆகியவை களே மாறியிருக்கும்!

மேலட்டஸ்: ''நீதிமன்றத்தார்களே! தீர்ந்து போனவிஷயத்தை புணர் விசாரணை புரிய சாக்ரடீஸ் இம்மாதிரி புதிர் போடுகிறாரா என்பதை அறிய ஆவல் கொண்டவனா யிருக்கிறேன்.

சாக்ரடீஸ்: ''மன்னிக்க வேண்டும் மகாஜனங் களே! எங்கே நான் பேசினால் மீண்டும் ஏதாவது

இவன் பொய் பகிரங்கப்படுத்தப்பட்டு விடுமோ என எப்படி பின் வாங்குகிருன் பார்த்தீர்களா இந்த மெலெட்டஸ்!''

நீதிமன்றத் தலைவர்: ''எமதன்புள்ள சாக்ரடீஸ்! வழக்கு முடிந்து தீர்ப்பும் நல்கியாகிவிட்டது இனி தாங்கள் மரண தண்டனையைத் தவிர வேறு ஏதாவது ஒரு தண்டனையை விதித்துக்கொள்ள மனமார பிரேரேபித்தால் அதைப்பற்றி நம் தாயகத்தின் வழக்கப்படி சிந்தித்து அதை ஏற்றுக்கொள்ள சிபார்சு செயகிறோம்.''

சாக்ரடீஸ்: ''ஹும்! தண்டனை - எனதருமை நண்பர்களே! எனக்காக தண்டனை நான் விதித்துக் கொள்ளவேண்டும். எதற்காக நான் அப்படிச் செய்ய வேண்டும்? தொன்மையும் வளமையும் கொண்ட இதே கிரேக்க மண்ணிலே பிறந்து தாயகத்தைக் காக்க என் இளமை யெல்லாம் ஒப்படைத்து - தன் மானத்தைக் காக்க - மக்களின் அறிவுக் கண்ணைத் திறக்க, என் வாழ்க்கையின் பிற்பகுதியை யெல்லாம் செலவிட்டு, இன்னும் கொண்ட கொள்கையில் பற்றும் உறுதியும் கொண்டு நிற்பதற்காகவா எனக்குத் தண்டனை? ஏத்தேனிய மண்டலம் - எனதருமைத் தாயகம் அதில் வாழ்வோர் அனைவரும் என் அன்புகெழுமிய சுற்றத்தார் - ஈடும் எடுப்புமில்லா இளைஞர்கள்: அவர்கள் சுகம் என் சுகம். அவர் வாழ்வு என் வாழ்வு, அவர்களின் தூய்மை என் இலட்சியம் என என் உள்ளத்திலே செதுக்கி வைத்து-கிரேக்க சட்டங்களை-அதன் தருமங்களை பெரிதாகப் போற்றி மதித்து இன்றளவும் உண்மை கிரேக்கனாக நான் உங்கள் முன் நிற்பதற்கா

கவா தண்டனை எனக்கு? அறிவு தோன்றிய கால முதல் என்குடும்பத்தைத் துறந்து மக்கள் மனைவியைப் பற்றிக் கவலைக் கொள்ளாது-பட்டம் பதவியைத் துறந்து-குடியரசில் தலைமை வகிக்கும் பல பல வாய்ப்புகளை உதறித் தள்ளி-மக்கள் அனைவரும் போற்றி மதிக்கும் செல்வத்தை வெறுத்து-என் உயர்ந்த ஆத்மாவிற்காக நான் கண்டு, உங்களுக்கும் காட்ட நினைத்த மெய்யறிவுக்காக கடைவீதிகளிலே, சாலைகளிலே, சோலை யோரத்திலே நின்று கதறிக் கதறி உங்களை திருத்தியதகாகவா எனக்குத் தண்டனை? எதற்காக எனக்குத் தண்டனை? அதுவும் அதை நானே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்? உள்ளபடியே என் சம்மதப்படி எனக்கு தண்டனை விதிப்பதனால்........?''

மேலேட்டஸ்: ''உங்களை உடனே வீடுதலை செய்து விட வேண்டும் அப்படித்தானே''

சாக்ரடீஸ்: ''அதுமட்டுமல்ல மேலெட்டஸ் ஓர் நல்ல வீரனுக்கு திறமையுள்ள சேனைத் தலைவனுக்கு மதிப்புள்ள கவிஞனுக்கு மாண்புள்ள நாவலனுக்கு எங்ஙனம் இந்த மண்டலம், அவரவர் பணியை திறமையாக விரைவாக மேன்மையாக செய்து வர போதிய வசதிகளும் வாய்புகளும் அளித்து வருகிறதோ அதைப் போலவே எனக்கும்-என் வாழ் நாள் முழுவதற்கும், உங்கள் உள்ளத்தைத் தூய்மை படுத்தும் மகத்தான பணியை செவ்வனே செய்துவர போதிய வசதியும், வாய்ப்பும் அளித்து அரசாங்க பொக்கிஷத்திலிருந்து மேலே கூறியவர்களுக்கு எப்படியெப்படிப் பொருளுதவி அளிக்கப் படுகிறதோ அதைப் போலவே

எனக்கும் ஆண்டு தோறும் பொருளுதவி புரிந்து என் பணியை நான் என் உயிர் உள்ளளவும் யாதொரு தடையுமின்றி, புரியுமாறு எனக்கு வசதி செய்துத் தரத்தான் கோருகிறேன்—இந்த தண்டனையை வேண்டுமானால் நீங்கள் கேட்டுக் கொண்டதற்காக உங்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு வைக்கிறேன்''

மேலேடடஸ்: ''பார்த்திரகளா மகாஜனங்களே! சாக்ரடீஸின் திமிர்வாதத்தை தயிரைக் குடித்தப் பூனை உரியையும் உருட்டித் தள்ளுமாம்'' இவருக்குப் பேச வாய்ப்பளித்ததே தவறு!''

அனேட்டஸ்: ''இவரைத் தன் தண்டனையை பிரேரேபிக்கக் கேட்டதே மாபெருகும் குற்றம்''

சாக்ரடீஸ்: ''அறநெறி காப்போர்களே என்னைக் கேட்டதற்கு நான் என் மனதிலே சரியென்று பட்டதைச் சொன்னேன் உங்களுக்கு இஷ்டமில்லையாயின் விட்டு விடுங்களேன் ஆனல் ஒன்று ஏதடா சாக்ரடீஸ் இவ்வளவு கர்வம் கொண்டவனகப் பேசுகிருன் என்று மட்டும் தவருக எண்ண வேண்டாம் என் மனதறிந்து எவர்க்கும் நான் தீங்கிழைத்ததில்லை, எவரையும் நான் காய்ந்ததில்லை, எவரும் என் விரோதிகளல்லர்! என் மனம் - என் தூய்மையுள்ள ஆத்மா, நான் நிரபராதி என்றே இன்றளவும் எடுத்துரைக்கிறது. என் நெஞ்சம் அறிந்த உண்மையை உங்கள் மனம் அறியவில்லை, அதற்துக் காரணம் உங்கள் மனத்திற்கு உண்மையை அறிந்துகொள்ளும் சக்தி கிடையாதென்ருே - அல்லது வாதிகளின் மயக்கப் பேச்சுக்களால் அது நிலை கலங்கி

விட்டதென்றோ நான் சொல்ல வரவில்லை. ஆனால் என் கட்சியை எடுத்துப் பேச, அது சம்மந்தப்பட்ட உண்மைகளை எடுத்துக் காட்ட எனக்குப் போதிய அவகாசம் அளிக்கப்படவில்லை. நாம் அண்டை நாட்டாரிடம் காணும் வழக்கப்படி ஒரு வழக்கை பரிபூரணமாக விசாரித்தறிய போதிய கால வரையும், வாய்ப்பும் அளிக்கப்பட வேண்டுமென்ற நியதி நம் நாட்டிலும் ஏற்பட்டால் ஒரு வேளை நான் குற்றமற்றவனாக உங்கள் வாக்காலேயே தீர்மானிக்கப் படலாம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இப்போது நான் அதிகம் பேசாமல் உண்மை விவரங்களை அதிகமாக எடுத்துக் காட்டாமல், பெற்ற உங்கள் வாக்குகளே அதற்குப் பெருந்துணையாக நிற்கும் என்று மனமார நம்புகிறேன்.

மேலெட்டஸ்: "வழக்கின் விவரத்திற்கு வருமாறு சாக்ரடீஸை அழக்கிறேன்,"

அனிட்டஸ்: "நான் பிரதிவாதி அதிகமாகப் பேசுவதை விரும்பவில்லை:- தீர்ந்து போன வழக்கிற்கு விவாதம் தேவையில்லை,"

நக தலைவர்: "எம் மதிப்பிற்குரிய சாக்ரடீஸ்-உங்களுக்குப்பட்ட வேறு ஒரு தண்டனையை பிரரேபியுங்கள்,"

சாக்ரடீஸ்: "வெகு விசித்திரமாயிருக்கிறது நகரத்தார்களே"

மேலெட்டஸ்; "விசித்திரமல்ல"!

அனேட்டஸ்: "வேதனை" !

மேலெட்டஸ்: எமக்கிருக்கும் வேதனையில் நீர் விளையாடுகிறீர் !

அனேட்டஸ்: ஏன் நீங்கள் சிறையிலேயே கைதியாக இருக்கக் கூடாது?''

சாக்ரடீஸ்: ஊம் சிரை! மரண தண்டனையை விட இது எப்படி மேலானது. வரும் அதிகாரிகளுக்குப் பல்லிளித்து - அவனின் கொடுமை சொற்களை தாங்கி அவன் கோபாககனலுக்காளாகி அடிமையினும் அடிமையாக ஆட்பட்டுழல வேண்டும் என்றக் காரணத்தாலா ?

ஆ, ந. உறு: "எமதன்புள்ள பெரியோரே! இவ்வளவு விவாதம் ஏன்? ஏதாவதுதொரு தொகையை ஆபராதமாகக் கட்டிவிடுங்களேன்!''

சாக்ரடீஸ்: நகரமன்ற உறுபபினரே! உங்கள் அன்பான யோசனைக்கு என் நன்றி. ஆனால் நான் ஏழையல்லவா? எந்தக் காலத்திலும் பணக்காரனுக இருந்ததில்லையே நான், எனக்கெப்படி அபராதத் தொகையைக் கட்ட சக்தி யிருக்கமுடியும்? சிறைக்குத்தான் போக வேண்டும் ஆனுல் அதைத்தான் நான் விரும்பவில்லையே!

மேலெட்ட்ஸ்: இவ்வளவு கதைகள் ஏன் இவரை நாடு கடத்தி விடுங்களேன்!

அனேட்டஸ்: சபாஷ்! அதுதான் சரியான யோசனை!

சாக்ரடீஸ் : எதுதான் சரி! மீண்டும் ஒரு முறை அப்படிச் சொல்லாதீர்கள்! அம்மாதிரிப் பேசுவதை நான் ஒரு முறையாகவேக் கொள்ளமாட்டேன். நான் ஏன் நாடு கடத்தப்பட வேண்டும்? குன்றுகளும் கோட்டைகளும் நின்று அணிசெய்யும் இந்த மங்கலத் தாயகத்திலே பிறந்து, காலமெல்லாம் இப் பொன்னுட்டிலேயே உலவி, மக்களின்அறியாமையை நீக்கி, அதை ஒழிக்க சலியாமல் உழைத்து, அதன் காரணமாக இன்னல்கள் பலபெற்று அமைதியை நாடி நிற்கும் எனக்கா நாடு கடத்தல் தண்டனே. முடியாது! முடியாது! ஒருக்காலும் முடியாது பிறந்த மண்ணிலேயே என்னைப் பிணமாக்குங்கள் - இந்த மண்ணிலேயே என் செங்குறுதி தோயட்டும் - அந்தச் செங்குறுதிக் கறைகள் இந்த மண்ணிலே மட்டுமல்ல! உங்கள் இருதயத்திலே-இளைஞர் உள்ளத்திலே-இந்த எழில் நாட்டின் மாண்பு மிக்க சரித்திரத்திலே - இதன் இலக்கியங்களிலே படியட்டும் - அவற்றின் ஒவ்வொரு அணுவும் உலகினருக்கு அறிவிக்கட்டும். ''ஊருக்குழைத்தவன் கதி இது தானென்று, எதிர்காலம் இந்த அவக்கோலத்தைக் கண்டு களிக்கட்டும்'' என்னைப் பொருத்த மட்டில் என் உயிர் மேல் எனக்கு ஆசையில்லை. என் உயிரை எங்காகிலும் ஓடியாகிலும் காப்பாற்றிக் கொள்ளலாமே என்ற பேராசைவம் இல்லை - என் தாயகத்திலேயே கொள்கையை எடுத்துரைக்க - பேச்சுச் சுதந்திரம் மறுக்கப்பட்டு நீதி மன்றத்திலே நான் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கிறேன் என்றால் அவ்வளவு சகிப்புத் தன்மை இங்கேயே நிலவுகிறதென்றால் வேற்று நாட்டார் என் உரைகளை ஏப்படி ஏற்கமுடியும்? எப்படி

என்னை - என் கேள்விகளைச் சகித்துக் கொள்ள முடியும்? ஏன் சகித்துக் கொள்ளவேண்டும்? தாயகமே என்னைத் துரத்தியான பிறகு வேற்று நாடுகள் என்னை வாகை சூடியா வரவேற்கும். உங்களிடையே இன்று என் மேல், என் சொல்லோவியங்கள், வெறுப்பு ஏற்பட்டபடி சென்ற நாட்டினருக்கும் ஏற்பட்டால் நான் மீண்டும் அங்கிருந்து வேறெங்காகிலும் சென்றோடிப் பிழைக்க வேண்டும். கேவலம் இந்த உயிருக்காக நான் நாடோடியாக வேண்டும்! ஏன் இந்தத் தொல்லை.?''

நீ--மன்-உறு : ''வேற்று நாடு சென்று அங்கே உங்கள் வாழ்நாளை அமைதியாகவே கழிக்கலாமே! அங்கு போனபிறகும் ஏன் பிரசாரம்?

சாக்ரடீஸ்: அதுதான் முடியாத காரியம். பொது வாழ்விலே புகுந்த நாள் முதல் இன்றுவரை நான் ஒருக்காலும் என் கொள்கைக்காக பின்வாங்கியது கிடையாது—எதிர்ப்புக்காக அஞ்சியதும் கிடையாது. என் ஆத்மா எனக்கிட்ட கட்டளையை நான் செய்துத்தான் வந்திருக்கிறேன். இனியும் தொடர்ந்து செய்வேன்—அதிலொன்றும் எந்த சக்தியும் குறுக்கிட முடியாது. வேண்டுமென்றால் என் உயிரைப் பிரித்துவிடலாம் அவ்வளவுதான் முடியும்.

நக-உறு: அருமைச் சாக்ரடீஸ்! உங்களை இழக்க நாங்கள் விரும்பவில்லை. ஏதாவது அபராதத் தொகையை நீங்கள் கட்டி விடுதலை அடையத்தான் வேண்டும்.

சாக்ரடீஸ்: நான் தான் முதலிலேயே குறிப்பிட்டு விட்டேனே என்னுல் அசைச் செய்யச் சக்தி இல்லை யென்று. என்னிடம் செல்வம் இருந்திருந்தால் அதை இவ்வளவு நேரம் மகிழ்ச்சியுடன் கொடுத்துவிட்டிருப் பேன். ஆனுல் இல்லையே! வேண்டுமானுல் ஒரு மினு (60 ரூ.) அபராதமாகப் போடுங்கள் தருகிறேன்.

மற்ருெரு-நக-உறு: முப்பது மினு போட்டால்?

சாக்ரடீஸ்: போட்டால் நீங்கள்தான் உத்ர வாதம்!

மெலட்டஸ்: என்ன இது மன்றத்தார்களே! இது நீதி மன்றமா? பேரம் பேசும் சந்தைக் கடையா? குற்றவாளியிடம் அவ்வளவு கருணை ஏன் உங்களுக்கு!

அனைட்டஸ்: நாங்கள் வீணில் பொருத்திருக்க மாட்டோம். தேவையில்லாத விவாதங்களால் காலம் கடத்த வேண்டாம் இரண்டிலொன்று சொல்லுங்கள் நாங்கள் போகிருேம்!

நீதி-மன்-தலை: சற்றே பொருங்கள் நண்பர்களே! சாக்ரடீஸ் உங்கள் கடைசி அபிப்பிராயம்தான் என்ன?

சாக்ரடீஸ்: மதிப்புள்ள தலைவரே! நான் சொல்ல வேண்டிய வற்றைச் சொல்லி விட்டேன் கடைசியாக

கூறப்படவேண்டியது உலகிற்கு என்செய்திதான்.

ஏத்தென்ஸ் நீதி மன்றத்திலே அமைதி நிலவியது- எவர் முகத்திலும் ஒளியில்லை - இளைஞர் உள்ளம்

கோபக் கனலால் கருகிக் கொண்டிருந்தது - நகர மன்றத்தார் உள்ளத்திலே அதிர்ச்சியே நிலவியது-சாக்ரடீஸின் கம்பீரமானத் தோற்றமும்—அறிவு தோய்ந்த அன்புச் சொற்பொழிவும்தான் இதற்குக் காரணம்!' தலைவர் மெள்ளப் பேசலானார்:

"ஏத்தேனிய மக்களே! இன்று நீதி மன்றம் நம்மையு மறியாமல் அமைதியற்றுக் கிடக்கிறது! ஆயாசமும் - பெருமூச்சும் - எங்கும் - எவரிடத்தும் காணப்படுகிறது - எடுத்துக்கொண்ட வழக்கின் பிரச்சனைதான் இவ்வளவிற்கும் காரணமென யூகிக்க வேண்டி யிருக்கிறது. இந்த வழக்கின் நீதியும் நேர்மையும் ஒரு புற மிருந்தாலும், மக்களும் – அவர்களின் பெருவாரியான வாக்குகளால் அளிக்கப்பட்ட தீர்ப்பும்-முடிவும் கவனிக்கப்பட வேண்டிய தொன்றுகும். எனவே வாதி மெலெட்டஸின் தண்டனைப் பிரரேபனையையே நான் உங்கள் சார்பாக ஊர்ஜிதப்படுத்தவேண்டியதா யிருக்கிறது. ஆகவே சற்று நேரத்திற்கு முன் உங்களில் 500-க்கு 340 பேரால் ஒரு மனதாகக் கருதப்பட்ட மரண தண்டனையை சாக்ரடீஸிற்கு அளிக்க வேண்டி யிருக்கிறது! எனவே நீதியின் போக்கை எதிர் காலத்திற்கே விட்டு விட்டு இதே மரண தண்டனையை நான் ஊர்ஜிதப் படுத் துகிறேன்,"

தீர்ப்பைக் கேட்டதும் திகைத்தனர் மக்கள் - இளைஞர்கள் அலறித் துடித்தெழுந்தனர் - அவர்களின் கோபக்கனல்—சட்டத்தை—சம்பிரதாயத்தை — ஏன் நீதிமன்றத்தையே சுட்டெரித்துவிடுமோ வென அஞ்ச

வேண்டியிருந்தது. பாராளும் மன்றத்திலே - கூக்குர லும்—அனல் கக்கும் வார்த்தைகளும் பரிமாரிக்கொள் ளப்பட்டன. வைதீகர்கள் மெள்ள நழுவலாயினர். மெலெட்டஸூம் மற்றயோரும் தங்கள் பாதுகாப்பிற் காக நகர் காப்பவர் உதவியை நாட வேண்டியிருந்தது. மன்றத்திலே ஒரே கொந்தளிப்பு. இளைஞர் எதற்கும் துணிந்தவராய் நின்றனர். ஆனுல் அவர்களின் கூரிய கண்களிலிருந்து மட்டும் நீர் வழிந் தோடிய வண்ண மிருந்தது. உள்ளபடியே புரட்சித் தலைவர்கள் எனப் படுவோர் மட்டும் அவ்வளவு செல்வாக்கின் மத்தியில் அன்றங்கு இருந்திருந்தால்—ஏதென்ஸ் நகரம் அந்த தீர்ப்பின் எதிரொலியெனத் தீக்கிரையாகி இருக்கும்! ஆனுல் சொல்லின் செல்வர்—அமைதியின் நண்பர்—தியாகத்தின் சின்னம்—சாக்ரடீஸ் அதன் தலைவராத லால் நிலைமையே மாறிவிட்டது.—வேதனைத் தீ அன்பு நீரால் அணைக்கப்பட்டது. சுடுசொல் அன்புக் குரலால் தணிக்கப்பட்டது.

இளைஞர்களைக் கூவியழைத்தார் சாக்ரடீஸ். இளை ஞர்கள் அறியாமையை கண்டிக்க வந்தார் அம்மா வீரர். இதுபோன்ற நிலையை நாம் எங்காகிலும் கேட் டிருக்கிறுமா? தனக்கு அநியாயமாக மரண தண்டனை விதிக்கப்பட் டிருக்கிறது—தீர்ப்பு அநியாயமானது என்று கருத நாடாளும் மன்றத்திலே ஏறத்தாழ பாதி பேர்கள் இருக்கிருர்கள் எதனையும் பொடியாக்கவல்ல இளைஞர் படை அருகிலிருக்கிறது. கோபமும்—ஆத் திரமும் அவர்களுள்ளத்திலே விட்டெறிந்த வண்ண மிருக்கிறது. இந்நிலையில் சாக்ரடீஸ் கண்ணசைத் திருந்

தால் நாடு களமாகி யிருக்கும்! ஆனல் அப்படி செய்தாரா அம் மாவீரர்? செய்வ தோர் புறமிருக்கட்டும் கனவிலாகிலும் கிரேக்க சட்டதிட்டங்களை அது சரியோ தப்போ அதற்குக் கட்டுப்படாமலிருக்க, மதியாமல் அசட்டை செய்ய, நினைத்தாரா? இல்லையே! இவ ரன்றோ கிரேக்க மண்டலத்தின் உண்மைக் குடிமகன்! உயர்ந்த பிரஜை! ஈடும் எடுப்பு மில்லா சிந்தனைச் சிற்பி! அந்த ஆபத்தான நிலையைப் பொருட்படுத்தாது கூவி யழைத்த இளைஞர்களிடம்—ஏன் கிரேக்க குடிமக்க ளிடம் பேசி இருக்கிறார் பாருங்கள் என்ன அழகாக! இந்த சொற்பொழிவுதான் உலகின் இலக்கியம்—உயர்ந்த அறிவுப் பொக்கிஷம்! சாக்ரடீஸ் உலகிற்கு விடுத்த கடைசி செய்தி!

"சீலமும்—நேர்மையும் கொண்ட ஏத்தென்ஸ் மக்களே! அறநெறி கூறும் அறிஞர் மணிகளே—ஈடும் —எடுப்புமில்லா நல்லிளங்காளைகளே! உங்களின் ஏகோபித்த வாக்குகளால் எனக்கு மரண தண்டனை விதித்து விட்டீர்கள் இந்த மாபெரும் நிகழ்ச்சிக்காக உங்களில் யாருக்காவது லாபமடைந்து விட்டோ மென்ற மகிழ்வு இருக்குமானல் தவறான கணக்குப் போட்டவர்களாகத்தானவீர்கள். என்னை விட்டு—என் உரைகளை விட்டுத் தப்ப நீங்கள் எனக்கு மரண தண் டனை விதித்திருக்கிறீர்கள் ஆனல் அதனல் பெரிய தோர் பழியையும் தானே தேடிக் கொண்டுவிட்டீர்கள் சற்றுப் பொருமையுடன் நீங்கள் இருந்து நானே இறந் திருந்தால் ஏதோ சொற்ப காலத்திற்குள்ளாகவே மாண்டிருப்பேன் என் தொல்லையும் உங்களைவிட்டு

எந்த முயற்சியும்—பழியுமில்லாமல் அழிந்தொழிந்திருக்கும் ஆனுல் எனக்கு மரணதண்டனே விதித்ததால் வருங்காலம் உங்களே—இந்த எழில் நாட்டைதான் பழிக்கும். ஏதோ தனிப்பட்டக் காரணமாக இந்த ஏத்தென்ஸ் மண்டலத்தை இகழ வேண்டியவர்கள் எல்லோரும் என் மரண தண்டனேயை ஓர் சாக்காகப் பயன் படுத்தி "சாக்ரடீஸ் ஓர் அறிஞன்! அவனே அநியாயமாகக் கொன்ருர்கள் இந்த ஏத்தென்ஸ் நகரத்தார்கள்" என்று பகிரங்கமாக பறைசாற்றுவார்கள் உள்ளபடியே நான் ஒரு அறிஞனுக இல்லாவிட்டாலும் இந்த நாட்டை இகழ்வதற்காகிலும், உங்களேப் பழிப்பதற்காகிலும் என்னே அறிஞனுக்கிக் காட்டுவார்கள் எது எப்படியாளுலும் நான் பேசத் தகாதவழில் பேசவில்லே, விரும்பத்தகாத வகையில் என் செயலேத் திருத்தி மாற்றிக்கொள்ள வில்லேயென்றக் காரணத்தால்தான் மரண தண்டனே விதிக்கப்பட்டிருக்கிறேன் — அழுவதும்—கொஞ்சுவதும், கோழைத்தனமான காரியங்களே தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதும், ஆகிய பண்புகளே நான் கையாண்டிருந்தால் ஒரு வேளே உயிருடன் திரும்பியிருப்பேன்! அதை நான் விரும்பாதது மட்டுமல்ல! அத்தகைய செயல் புரிவோரையும் கண்டிக்கிறேன். சீறிப்பாய்ந் தோடிவரும் பகைவனேக் கண்டு கலங்கி—கரத்திலேயுள்ள கட்டாரியை மண்ணிலே பாய்ச்சி கால்களிரண்டையும் தரையிலே முட்டவைத்து கூப்பிய கரங்களுடன் களத்திலே நின்ருல் பகைவனின் கூர்வாளுக்குத் தப்பித் திரும்பி வரலாம்? ஆனுல் மானமுள்ளவன் செயலா அது! அப்படி செய்பவனே மதிப்போமா நாம்? காரி உமிழ மாட்டோமா? அதைப்

போலத்தானே நீதி மன்றத்திலும்? கொக்கரித்து நிற்கும் மக்கள் கூட்டம் தலை கீழாக உள்ள பழைய முறைகளைப் பயன் படுத்தி—அநியாயமாக ஒருவனைப் பலி கேட்கிற தென்றால் அதன் முறையிலே—நாகரீகத்திலே-நடைமுறையிலே ஏதோ கோளாறு இருக்கிறது, என்றுதானே பொருள் அதை எடுத்துக் காட்டியும் புரிந்துக் கொள்ளாதவர்கள் இருக்கிறார்களென்றால் அதற்காக வெட்கப்பட வேண்டியவன் எடுத்துக்காட்டும் மானமுள்ளவனா? அல்லது நிலைமையைப் புரிந்தும் வேஷமிடும் சந்தர்ப்ப வாதிகளா? எனவே தோழர்களே! என்னைப் போல மானமுள்ளவன்-தூய்மையான கொள்கைப் படைத்தவன் மரணத்தைக் கண்டு அஞ்சமாட்டான். அதே நேரத்திலே தன் இதயத்தை பிளந்தெறிந்து செங்குறுதியை, பிறந்த மண்ணிலே, சிந்தியாகிலும் தாயகத்தின் கரையான்களை-சந்தர்ப்ப வாதிகளை-சட்டத்தை தனக்காக பயன் படுத்துபவர்களை-பகல் வேடதாரிகளை, உலகிற்குக் காட்ட என்றென்றும் தவறவே மாட்டான். எதிர் காலம் அவர்களுக்குச் சரியானதோர் பாடம் கற்பித்துத்தான் தீரும் அவர்களின் மனசாட்சி தங்களின் செய்கைத் தவறு தவறு என்று வற்புறுத்திக் கூறும் ஒவ்வொரு கணமும் அதற்கு அவன் தலை வணங்கியேத் தான் தீர வேண்டும்.

ஆனால் என்னைப் பொருத்த மட்டில் உங்களுக்கு என் இறுதியான சேதியை அறிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த எழில் நாட்டில் நான் பிறந்தது அதன் வாழ்வில் இந்தக் கணம் வரை கவலை கொண்ட

வனுயிருக்கிறேனென்ற காரணத்தால்! எனக்குப் பிறகு புதிய புதிய முறையிலே கிளம்பப் போகும் பல அறிவுத் தாக்குதலுக்கு நீங்கள் ஆளாகித்தான் தீருவீர்கள் .சாக்ரடீஸ் இன்றுடன் தொலைந்தான் என மகிழ்வுறுவோர் அனைவருக்கும் ''சாக்ரடீஸ் தொலையவில்லை. அவன் உடல் தான் வீணில் வீழ்த்தப்பட்டது. அவன் உள்ளம் இதோ இருக்கிறது'' என்று மார்தட்டி எடுத்துக்காட்ட ஆயிரமாயிரம் வீர இளைஞர்கள் இதோ இருக்கிறார்கள்-வளரும் அவர்களின் அறிவுப் படைவரிசையை எந்த ஒரு மகத்தான சக்தியாலும் சிதறடித்துவிட முடியாது. என்பதைக் கல்லின் மேல் செதுக்கி வைத்துக் கொள்ளுங்கள் இன்றைய இளைஞர் மணிகள்-நாளைய சிந்தனைச் சிற்பிகள்-நாட்டின் மானங்காப்பவர்கள்-இதை எவரும் மறந்தவிடக் கூடாது-மறந்துவிடவும் முடியாது. என் சொல்லோவியங்கள் கொள்கைகள் அவர்களின் அறிவுச் சோதனையின் மூலம் இந்த நாட்டிலே மட்டுமல்ல-உலகெங்கணும் எனக்குப் பின்னுல் சில பல காலங்கள் வரையல்ல, உலகு உள்ள அளவும் பிரதி பலித்துத்தான் தீரும்-அவைகளை நிராகரிக்க அல்லது தடுக்க உங்களால் முடியாது-நீங்கள் உலவும் போது-தூஞ்சும்போது-துயில் விட்டெழும்போது-வேறு எவருக்காவது மரண தண்டனை விதிக்கும்போது—என்னைப் போலவே என் இளைஞர்களை வீதி வீதியாக சந்து சந்தாக மடக்கி மடக்கி உங்களைக் கேள்விகள் கேட்கும்போது, உங்களுக்கும் உங்கள் பொன் மனத்திற்கும் நடக்கும் போராட்டதில் நீங்கள் தோல்வியுற்று உங்கள் அறியாமையை உணர்ந்து அதற்காக வெட்கித் தலை குனியத்தான் போகிறீர்கள் இதை எளிதில் மறந்

துவிட வேண்டாம்-அப்போது சாக்ரடீஸ் நாஸ்திக னல்ல என்பதை மனதார அறிந்து நெஞ்சார உணர்வீர் கள் என்பது மட்டும் உறுதி.

எனவே நண்பர்களே கடைசியாகச் சொல்கிறேன் உண்மைக்காக உயிர் விடுங்கள் மரணம் உங்களை ஒன் றும் செய்துவிடாது. அதற்காக அஞ்சாதீர்கள்—உண் மையைக் கைவிடாதீர்கள் ஏதோ வேத வேதாந்திகள் கூறுகிறபடி பார்த்தால் கூட ஆத்மா நமக்குப் பிறகு நேராக நாம் எய்யும் அம்மைப் போல் மேலுலகத்திற் குப் போய்தான் தீரும் என்ற சித்தாந்தத்தை ஒரு வேளை நம்பி அதன்படி பார்த்தால் கூட நாம் மரணத் திற்கு அஞ்சத் தேவையில்லை, இது காரும் மாண்டொ ழிந்த நம் முன்னோர்களை மேலுலகில் நம் ஆத்மா கண்டு களிக்கும் பாக்கியம் பெருவோம் என்றால் அதற் காக நாம் ஏன் துயரூர வேண்டும் அல்லது நாம் இறந்த பிறகு ஆத்மா சூன்யமாய் மறைந்தொழியும் என்ற தற்கால நம் சித்தாந்தப்படிப் பார்த்தாலும் நாம் ஏன் கவலைப்படவேண்டும்?

எனவே நெஞ்சம் குமுறி உள்ளம் வேதனைப்பட்டு செயலிலே தடுமாற்றம் கண்டு, பேச்சிலே குழைவை யும் நெளிவையும் வருவித்துக் கொண்ட வாதிகளின் நிரூபிக்க முடியாத வாதங்களை ஏற்று எனக்கு அநியா யமாக மரண தண்டனை விதித்தீர்களே என்று உங்கள் மேலோ—அல்லது போலிக் காரணங்களையும்—பொய் யுரைகளையுமே தேடியழைத்து—தங்களுக்கு அதைச் சாதகமாக ஆக்கிக் கொண்டு எனக்கு இந்நிலையை அளித்த வாதிகள் மேலோ—எனக்கு எதிராக தங்க

ளின் வாக்களிக்கும் வாய்ப்பை பயன்படுத்திய நண்பர்கள் மேலோ நான் வருத்தப்பட வில்லை, அதற்கு மாருக வாழ்த்துகிறேன். எதிர்கால உலகில் எனக்கு நல்லதோர் பெயரைப் பெற்றுக் கொடுக்கக் காரணகர்த்தாக்கள் இவர்கள் தான் என மனமார வாழ்த்துகிறேன். அதுமட்டுமல்ல எனக்குச் சாதகமாக வாக்களித்த நண்பர்களுக்கும் என் அருமை மாணிக்கங்களாம் இளைஞர்களுக்கும்—நான் பிறந்த இப்புனித பூமிக்கும் என் உளமார்ந்த வணக்கத்தை இருதய பூர்வமான நன்றியைச் செலுத்திக் கொண்டு, நல்வாழ்வு பல பெற்று வாழட்டும் இவ்வேதென்ஸ் நகரம் என மீண்டும் வாழ்த்தி உங்களிடையே விடைபெற்றுக் கொள்கிறேன், வணக்கம்,

வெளிவருகிறது

கௌதமன்

தீட்டியது

நரகலோக யாத்திரை

(அற்புதமான கற்பனைச் சித்திரம்)

★

மின்னொளி பதிப்பகம்

7, கிரிகோரி தெரு — சென்னை-1